**CC**.**No**.195-2024

**Date**: 05.02.2026

**ம.சா. 1. காளிதாஸ் த/பெ. முருகேசன், காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1**) என் முழுப்பெயரே காளிதாஸ்தான். எனது முழுப்பெயரை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் மெடிக்கல் ஷாப்பில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பால் வியாபாரம் செய்து வந்தேன். எந்த மெடிக்கலில் நான் மேலாளராக பணியாற்றி வந்தேன் என்றால் சுபா மெடிக்கலில் வேலை செய்தேன். நான் எத்தனை ஆண்டுகளாக பணி செய்து வருகிறேன் என்றால் சுமார் 15 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். தற்போதும் நான் பணியில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் பணி செய்யும் விபரத்தை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்தவில்லை. எனது ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ரூ. 2 லட்சம் ஆகும். நான் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எனது சொந்து ஊர் கரூர் அங்கு எனக்கு சொந்த வீடு உள்ளது. இங்கு 40 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எனக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ. 25 ஆயிரம். 2021ல் எனது ஆண்டு வருமானம் ரூ.2 லட்சம்தான்.

2) 05.07.2023ல் நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதில் செல்போன் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அது யாருடையது என்றால் எதிரி சேதுராமனுடையதுதான். மேற்படி செல்போன் எண்கள் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் அவர் என்னிடம் பணம் வாங்கும்போது கொடுத்தார். எனது செல்போன் எண்கள் 9442644337, 9952222441 என்பதாகும். மேற்படி இரண்டு செல்போன் எண்களும் என் பெயரில்தான் உள்ளது. நான் கடந்த 2021 முதல் எத்தனை முறை நான் எதிரிக்கு போன் செய்துள்ளேன் என்றால் நான் நிறையமுறை போன் செய்துள்ளேன். ஆனால் எனக்கு எத்தனை முறை என்று நினைவில்லை. நான் ஒரு முறை கூட எனது செல்போன் எண்ணிலிருந்து எதிரிக்கு போன்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரி 20.07.2023 ம் தேதி எனக்கு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி பதில் அறிவிப்பில் எதிரி என்னை யார் என்றே தெரியாது என்று சொல்லியுள்ள விபரம் தெரியும் ஆனால் அது பொய். 19.12.2021 ல் வழக்கு தொகை கொடுக்கவில்லை, காசோலை கொடுக்கவில்லை, என்று சொல்லியுள்ள விபரம் தெரியும் ஆனால் அது பொய்யானது. 09.06.2023 தேதியிட்ட காசோலையை 23.04.2023 ல் கொடுக்கவில்லை என்று மறுத்துள்ள விபரம் தெரியும் அது பொய்.

3) என்னை யார் என்றே தெரியாததால் அவரது வங்கியில் stop payment மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி பதில் அறிவிப்பில் 2012–2013 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் எதிரி கொக்கோ கோலா தொழில் செய்து வந்தபோது தினசரி கந்த வட்டியாக திருச்சியை சேர்ந்த பாலசுப்பிரமணியன், செல்வம் ஆகியோரிடம் ரூ. 8 லட்சம் வாங்கிய கடனுக்கு பிணையாக இந்த வழக்கின் காசோலை மற்றும் அவரது நில ஆவணங்களை பிணையாக அவர்களிடம் கொடுத்திருந்தார் என்ற விபரத்தை எதிரியின் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் ஆனால் அது பொய். எதிரி வாங்கிய கடனை அடைப்பதற்காக அவருக்கு பாத்திய பட்ட சொத்தினை விற்று கடனை அடைத்தார் என்ற விபரம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியும் ஆனால் அது பொய். நான் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்து நான் எதிரிக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். 02.03.2025 ம் தேதி எதிரியும் அவரது மகனும் சேர்ந்து திருச்சியை சேர்ந்த செல்வராஜ் என்பவருக்கும் எனக்கும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

4) மேற்படி அறிவிப்பிலும், எனக்கு ஏற்கனேவே கொடுத்த பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுத்து பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. மேற்படி அறிவிப்பின் நகல் திருச்சியை சேர்ந்த

பாலசுப்பிரமணியன் என்பவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலை பாலசுப்பிரமணியன் வசம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்டதுதான். 19.12.2021ல் எதிரி எழுதிக்கொடுத்தாக சொல்லும் கடனுறுதி சீட்டில் சாட்சிகள் என்ற இடத்தில் யாரும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் கையொப்பம் உள்ளது. மேற்படி கடனுறுதிசீட்டை எழுதியவர் காரைக்குடியை சார்ந்தவர் என்றால் சரிதான். 2021 ல் கொரோனா தொற்று ஏற்பட்டு உலகம் முழுவதும் லாக் டவுனில் இருந்தது என்றால் சரிதான்.

5) கொரோனா காலக்கட்டத்தில் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு செல்லவேண்டும் என்றால் அரசிடம் பாஸ் வாங்கி செல்லவேண்டும் என்றால் சரியல்ல . அவ்வாறு அந்த காலகட்டத்தில் இல்லை. 19.12.2021ல் எதிரி என்னை எப்படி தொடர்பு கொண்டார் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு என்னை போனில் தொடர்பு கொண்டு வருவதாக சொல்லியிருந்தார். என்னை எதிரி எந்த செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டார் என்றால் நினைவில்லை. எதிரி எந்த எண்ணில் இருந்து என்னை தொடர்பு கொண்டார் என்றால் நினைவில்லை. 19.12.2021ல் எதிரி என்னை எந்த விதத்திலும் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும் எதிரி காரைக்குடிக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. திருச்சியை சேர்ந்த சுப்பிரமணியத்திடம் கொடுத்த காசோலையை நான் பெற்று எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் ரூ. 9 லட்சத்திற்கு நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் வீட்டிற்கு மாதம் எவ்வளவு வாடகை செலத்திவருகிறேன் என்றால் ரூ. 5 ஆயிரம். அந்த வீட்டில்தான் நான் குடியிருந்து வருகிறேன்.எத்தனை ஆண்டுகளாக அந்த வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் 23 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். 2021ல் நான் எவ்வளவு சம்பளம் வாங்கினேன் என்றால் ரூ. 25 ஆயிரம். 2021ல் எனது வங்கி கணக்கில் ரூ. 9 லட்சம் பணம் இருந்ததா என்றால் இல்லை, கிராமத்தில் இருந்து எனது உறவினர்கள் கொடுத்து வைத்திருந்த தொகையை கொடுத்தேன்.

6) மேற்படி விபரத்தை நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வட்டி தொழில் செய்வதற்கு வட்டாட்சியரிடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை, 2-3 நபர்களுக்கு நான் கொடுத்துள்ளேன். நான் வட்டி தொழில் செய்யவில்லை. திருச்சியை சேர்ந்த சுப்பிரமணியத்தை எனக்கு தெரியாது. ஆனால் செல்வம் எனக்கு மாமா உறவு முறை. செல்வம் திருச்சி தென்னூரில் பால் மற்றும் நெய் கடை வைத்துள்ளார். அதன் பெயர் வி.கே.ஏ டெய்ரி என்பதாகும். செல்வமும் திருச்சியில் வட்டி தொழில்தான் செய்து வருகிறார் என்றால் தெரியாது. செல்வராஜ் என்பவர் செல்வத்திற்கு நெருங்கிய உறவினர் என்றால் இல்லை எனக்கு தூரத்து சொந்தம். நான், செல்வராஜ் மற்றும் செல்வம் அனைவரும் சேர்ந்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி வழக்கு காசோலையை வேறு நபருக்கு கொடுத்தது என்று எதிரியின் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளதால் என் வழக்கிற்கு வழக்கு மூலம் எழவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குசெலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட கூடியது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.07 18:11:39 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)